4th August 1966]

கனம் திரு. பூ. கக்கன் : முன்னல் எவ்வளவு சம்பளம் கொடுக்கப் பட்டதோ அதுவேதான் இப்போதும் கொடுக்கப்படுகிறது. விசேஷமாக ஒன்றும் கொடுக்கவில்லை.

திரு. சோ. ஆறுமுகம் : டெபுடி சேவக்குகள் எந்தத் தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன சேவையில் எவ்வளவு தூரம் அவர்களுக்கு அக்கறை இருக்கிறது என்று பார்க்க வேண்டும், நன்றாகப் பாடத் தெரியுமா என்றும் பார்க்க வேண்டும். பிரசாரம் செய்வதற்குப் பாட்டும் அவசியமாக இருக்கிறது.

***73 கேள்வி—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) ஹரிஜன நல இலாகாவில் பணி புரியும் டிப்டி சேவக்கு களின் தற்போதைய சம்பளம், படித்தொகை என்ன ?

(இ) அவைகளை உயர்த்தும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) சம்பளம்—மாதம் ரூ. 80 (இது நிலைச் சம்பளமாகும்).

அகவிலைப்படி—இவர்களுக்கு இல்லை.

பயணப்படி—வெளியூர்களில் உள்ளவர்களுக்கு, தமிழ்நாடு பயணப்படி விதிகளுக்கிணங்க பயணப்படி அனுமதிக்கப்படுகிறது. சென்னை மாநகரில் உள்ளவர்களுக்கு வண்டிச் செலவிற்காக மாதம் ரூ. 16 தரப்படுகிறது.

(இ) இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : தற்போதைய ஊதியத்தைப் பெற்றுக் கொண்டே கூட இத்தகைய ஊழியர்கள் தங்கள் வேலை களுக்கு இடைஞ்சல் இல்லாத அளவுக்கு முன்னல் விதித்திருந்த பணிகளைச் செய்ய முடியும் என்பதாக சம்பந்தப்பட்ட ஜில்லா ஹரிஜன இலாக்கா அதிகாரிகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அத்தகைய பணிகளையும் அவர்களுக்குக் கொடுக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

MR. SPEAKER : It is a hypothetical question.

திரு. சா. கணேசன் : இந்த டெபுடி சேவக்குகளுக்குக் கல்வி அடிப்படையில் குறைந்த பட்ச தகுதி இன்னவாவது இருக்க வேண்டுமென்று வரையறை செய்யப்பட்டிருக்கிறதா ? அப்படி யானல் அந்த வரையறை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பொதுவாக எஸ்.எஸ்.எல்.சி. படித் திருக்க வேண்டுமென்று இருக்கிறது. சில சமயங்களில் பிரசாரத்தில் நல்ல திறமை உடையவர்களாக இருந்தால் அவர் களுக்கு விதி விலக்குக் கொடுக்கவும் கொடுக்கிறோம்.

[4th August 1966

திரு. ஜே. மாதா கவுடர் : எல்லாச் சர்க்கார் ஊழியர்களுக்கும் கிராக்கிப்படி கொடுக்கும்போது அரிஜன இலாக்காவில் பணியாற்றுகிற டெபுடி சேவக்குகளுக்கு மட்டும் கிராக்கிப்படி இல்லை, பிரயாணப்படி இல்லை என்று இல்லை இல்லை என்று சொல்லக் காரணம் என்ன ? விலைவாசி உயர்வு அவர்களை மட்டும் பாதிக்கவில்லையா ? ஆகவே உடனடியாக அவர்களுக்கும் கிராக்கிப்படி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் சேவா உணர்ச்சியின் அடிப்படையில் வந்துள்ளவர்கள்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் அரசாங்கத்தின் முழு நேர ஊழியர்களா ? அவர்களுக்கு மற்ற அரசாங்க ஊழியர்களுக்கு உள்ளதைப் போல ஒழுங்கு முறை விதிகள் பொருந்துமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அவர்கள் அரசாங்க முழு நேர ஊழியர்கள்தான். அவர்களும் அரசாங்க ஊழியர்களின் ஒழுங்கு முறை விதிகள் பொருந்தும்.

ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கு விடுதி

* 74 கேள்வி—திரு. ம. கமலநாதன் : கனம் உள்துறை அமைச்சர் நயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஊத்தங்கரையில் அரிசன மாணவர்களுக்கான தங்கும் விடுதி புதிதாகக் கட்டும் உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Reclamation of arid seashore lands

* 75 Q.—Sri V. Sankaran : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether there is any proposal to reclaim arid seashore lands in the State and bring them under cultivation; and

(b) if so, the details thereof ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) ஆம்.

(இ) திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய கடற்கரை மாவட்டங்களின் கரையோரப் பகுதிகளை ஆராய்வதற்காகத் தனிப் பணியாளர்களை அரசாங்கம் நியமித்துள்ளது. இத் தனிப் பணியாளர்கள், இக் கரையோரப் பகுதிகள் நெடுகிலும் வேளாண்மைக்குப் பயன்படாமல் கிடக்கும் நிலப் பகுதிகளில் மண் வள ஆய்வு உட்பட விரிவான ஆய்வுகள் நடத்தி மேற்படி நிலங்களைச் சாகுபடிக்கேற்றவையாகச் செய்வதற்குரிய தக்க ஒழுங்கு நடவடிக்கைகளுடன் வரை படங்கள், மதிப்பீடுகள் இவற்றையும் தயாரிப்பார்கள்.